**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.495/2023</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி., பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பில் இரண்டாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னசாமி | தந்தை பெயர் | : | ராச்சிகவுண்டர் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 23.03.2026

**P.W. : 2**

**<u>வாதி தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது ஆதார் அட்டை நகல் **சாசாஆ.1** ஆகும். பிரதிவாதி முருகன், வாதி கருப்பையாவுடன் 09.12.2021 அன்று செய்து கொண்ட தாவா கிரைய உடன்படிக்கையில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வாசாஆ.1 தான் அந்த கிரைய உடன்படிக்கையாகும்.

வாசாஆ.1 ல் 3 ஆம் பக்கம் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். தாவா சொத்தை மொத்தம் ரூ.10,20,000/– த்திற்கு கிரைய ஒப்பந்தம் செய்து அன்றே ரூ.3,00,000/– வாதி, பிரதிவாதியிடம் கொடுத்தார்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.